செ.வெ.எண்.52 நாள்.20.04.2017.

திருநெல்வேலியில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக மண்டல அளவிலான பயிற்சி முகாம் – மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

--------

திருநெல்வேலி வண்ணார்பேட்டை எப்எக்ஸ் பொறியியல் கல்லூரி கூட்ட அரங்கில் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை Universal disability Identity Card (UDID) வழங்குவது தொடர்பான மண்டல அளவிலான பயிற்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.04.2017) துவக்கி வைத்தார்கள்.

பயிற்சியை துவக்கிவைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு புதிய தேசிய அடையாள அட்டை Universal disability Identity Card (UDID) மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் வழங்கப்படவுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை இதுநாள் வரை திருநெல்வேலி மாவட்டத்தில் 51,690 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் 32,642 நபர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 33,584 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இனிவரும் காலங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான ஸ்மார்ட் கார்டு வழங்குவதற்காக மென்பொருள் பதிவு செய்வது தொடர்பான பயிற்சியினை மத்திய, மாநில அரசு மூலம் பயிற்சி பொறுப்பாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களால் அரசு அலுவலர்களுக்கு, சிறப்பு மருத்துவர்கள், தொண்டு நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. ஸ்மார்ட் கார்டு பெறுவதற்காக திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் மாற்றுத்திறனாளிகள் இலவசமாக ஆன்லைன் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 1,083 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டை Universal disability Identity Card (UDID) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அடையாள அட்டை ஆதார் எண்ணுடன் இணைத்து வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் நேரடிடையாக விரைவில் சென்றடைய பெரும் உதவியாக இருக்கும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இம்முகாமில், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் (திருநெல்வேலி) திருமதி.சாந்தி குளோரி எமரால்ட், (கன்னியாகுமரி) திரு.பிரம்மநாயகம், (தூத்துக்குடி) திரு.சவரணன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.விஜயலெட்சுமி, மாநகர நகர் நல அலுவலர் திரு.பொற்செல்வன், ஸ்காட் கல்லூரி ரூரல் இயக்குநர் திரு.நாராயணன், பயிற்றுனர் திரு.தர்மேந்திரசாகன், மாநில ஒருங்கிணைப்பாளர் திரு.எபேநேசர் கிருபாகரன், தேசிய தகவல் மைய கூடுதல் மாவட்ட தகவல் அலுவலர் திரு.ஆறுமுகநயினார், கூடுதல் மாவட்ட தொழில் நுட்பபிரிவு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.